

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அய்யப்பன்தாங்கல், பரணிபுத்தூர், மௌலிவாக்கம் ஆகிய ஊராட்சிகளில் ஆலந்தூர் தொகுதி தி.மு.க. வெற்றி வேட்பாளர் தா.மோ.அன்பரசன் ஜீப் மூலம் வீதி வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.எத்திராஜ், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.




2026 சட்டமன்ற தேர்தலில் ஆவடி தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட 42 முதல் 48 வரை உள்ள வார்டுகளில் ஆவடி மாநகராட்சி பகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ள பல்வேறு திட்ட பணிகளை எடுத்துக் கூறி பொதுமக்களிடம் உதய சூரியன் சின்னத்திற்கு தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது வழி நடுவில் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தார்கள். இதில் திமுக நிர்வாகிகள் கூட்டணி கட்சி சார்ந்த தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

### கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியத்தில் - இன்று

# வேட்பாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் வாக்குச் சேகரிப்பு!

## கிராமம் கிராமமாகச் செல்கிறார்!

கும்மிடிப்பூண்டி. ஏப்.15-

கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் டி.ஜெ. கோவிந்தராஜன் வாக்குச் சேகரிப்பு சுற்றுப்பயண விவரம் வருமாறு:-

இன்று (15042026 - புதன் கிழமை) கும்மிடிபூண்டி தெற்கு ஒன்றியம் அயநல்லூர் குடியிருப்பு - காலை 08.30 மணி, அயநல்லூர் கிராமம் - காலை 09.00 மணி, காமாட்சிபுரம் கண்டிகை - காலை 09.30 மணி, ஏனாதிமேல்பாக்கம் கிராமம் - காலை 10.00 மணி, சோழியம்பாக்கம் குடியிருப்பு - காலை 10.30 மணி, சின்ன சோழியம்பாக்கம் - காலை 11.00 மணி, குருவாட்டுச்சேரி - காலை 11.15 மணி, நங்கபள்ளம் - காலை 11.30 மணி, வேற்காடு - காலை 11.45 மணி, பாலகிருஷ்ணாபுரம் - பகல் 12.15 மணி, புதுகும்மிடிப்பூண்டி - பகல் 12.30 மணி, புதுப்பேட்டை - பகல் 01.00 மணி, பில்லாக்குப்பம் - பகல் 01.30 மணி, ஜி.ஆர். கண்டிகை - பகல் 02.00 மணி, கள்ளூர் கிராமம் - பகல் 03.45 மணி, பாலவாக்கம் குடியிருப்பு - மாலை 04.15 மணி, பாலவாக்கம் கிராமம் - மாலை 04.30 மணி, மங்களம் - மாலை 05.00 மணி, புதுபாளையம் - மாலை 05.30 மணி, காரணி -மாலை 05.45 மணி, எருக்குவாய் கண்டிகை - மாலை 06.15 மணி, எருக்குவாய் -மாலை 06.30 மணி, சேர்ப்பேடு - மாலை 06.45 மணி, சந்தராபுரம் - இரவு 07.00 மணி, நெல்வாய் - இரவு 07.30 மணி, அஞ்சலம்பேடு - இரவு 07.45 மணி, முக்கரம்பாக்கம் குடியிருப்பு - இரவு 08.15 மணி, அண்ணாவரம் - இரவு 09.00 மணி, கொள்ளாநூர் - இரவு 09.30 மணி.

மேற்கண்டவாறு வேட்பாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் கிராமம் கிரமமாகச் சென்று வாக்காளர்களைச் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு திரட்டுகிறார்.

### இராயபுரம் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர்

# டாக்டர் அ.சுபேர்கானை ஆதரித்து - மு.க.தமிழரசு பிரச்சாரம்!

## இராயபுரம் கிழக்குப் பகுதி கழகச் செயலாளர் இரா.செந்தில்குமார் அறிவிப்பு!

சென்னை, ஏப்.15-

இராயபுரம் சட்டமன்ற தொகுதி தி.மு.கழக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் டாக்டர் அ.சுபேர் கான் எம்.எஸ் (ஆர்த்தோ)., அவர்களை ஆதரித்து மு.க.தமிழரசு அவர்கள் வீதி வீதியாக மக்களைச் சந்தித்து 'உதயசூரியன்' சின்னத்திற்கு வாக்கு சேகரிக்கிறார்.

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் தொகுதி மேற்கு பகுதிக்குட்பட்ட 50அ வட்டம் மற்றும் 49வது வட்டம் ஆகிய பகுதிகளில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்.

இந்நிகழ்ச்சியை தொகுதி பார்வையாளர் திரு. கலாநிதி வீராசாமி எம்.பி, சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தா. இளைய அருணா, நா. மனோகரன் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

வட்ட கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணன், மற்றும் க.கலைச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் பிரச்சாரத்திற்கு, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொள்ளவிருக்கின்றனர் என பகுதிக் கழகச் செயலாளர் இரா.செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

### கழக வேட்பாளர் மயிலை த.வேலு

# 171 (அ) வட்டத்தில் வாக்கு சேகரிப்பு!

## வட்டச் செயலாளர் பா.பொன்னுசாமி அறிக்கை!

சென்னை, ஏப். 15-

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சென்னை தென்மேற்கு மாவட்டம் வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலு அவர்கள் 171 (அ) வட்டச் செயலாளர் பா.பொன்னு சாமி தலைமையில், தீவிர வாக்கு சேகரிப்பு இன்று (13.4.2026) புதன்கிழமை 171 (அ) வட்டத்தில் காலை 7.30 மணியளவில் பிரச்சாரம் செய்யும் இடங்கள் சீனிவாசபுத்தில் தொடங்கி கற்பகம் அவின்யூ, காவலர் குடியிருப்பு, ராபட்சன் தெரு, சாலையர் தெரு, இராஜா கிராமணி தோட்டம், ராஜா தெரு, வேலாயுத ராஜா தெரு, நாராயண சாமி செட்டி தெரு, அப்பாவு கிராமணி தெரு ஆகிய இடங்களில் வாக்கு சேகரிக்கிறார்.

எனவே வட்டக்கழகத்திற்குட்பட்ட நிர்வாகிகள், மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள் பாகம் பொறுப்பாளர்கள் பாகம் உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பித்திட கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு 171 அ வட்டச் செயலாளர் பா. பொன்னு சாமி வேண்டுகோள் விடுத்து ள்ளார்.

### தூத்துக்குடி தெற்கு மாவட்டம்

# உடன்குடி கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

தூத்துக்குடி தெற்கு மாவட்டம், உடன்குடி கிழக்கு ஒன்றியச் செயலாளர் க.இளங்கோ அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற திரு. **செ.மதன்ராஜ்** *(13/91, முந்திரித்தோட்டம், பரமன்குறிச்சி, தூத்துக்குடி மாவட்டம் - 628 213)* அவர்கள் உடன்குடி கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 14.04.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



குன்னூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அ.தி.மு.க. மேலூர் ஒன்றிய கழக செயலாளர் உலிக்கள் சிவாஜி மேலூர் ஒன்றிய கழக அவைத்தலைவர் உள்ளிட்ட நிர்வாகிகள் நேற்று குன்னூர் நகர கழக அலுவலகத்தில் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பா.மு. முபாரக் முன்னிலையில் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன் உளிக்கல் பேரூராட்சி தலைவர் ராதா. பேரூர் கழகச் செயலாளர் ரமேஷ் குமார். பொதுக்குழு உறுப்பினர் சதக்கத்துல்லா. நகர கழக செயலாளர் ராமசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கே.ஏ.இளங்கோவன் தலைமை! காஞ்சிபுரம் தொகுதி வேட்பாளர்

# நித்யா சுகுமாரை ஆதரித்து - அனைத்து தொழிற்சங்கங்கள் தேர்தல் பிரச்சாரம்!

## க.சுந்தர் எம்.எல்.ஏ. – கி.நடராசன் – பி.எம்.தனசேகரன் தீவிர வாக்கு சேகரிப்பு!

காஞ்சிபுரம், ஏப்.14,

காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் நித்யா சுகுமாரை ஆதரித்து தொமு.ச. சார்பாக அனைத்து தொழிற் சங்கங்கள் தேர்தல் பிரச்சார தெருமனைக் கூட்டம் 18.4.2026 - சனிக்கிழமை அன்று மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரையில் கிருஷ்ணன் தெரு, சக்திவேல் திருமண மண்டபம் அருகில், பிள்ளையார் பாளையம், காஞ்சிபுரத்தில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு காஞ்சிபுரம் மாவட்ட தொ.மு.ச. கவுன்சில், செயற்குழு உறுப்பினர், அகில இந்திய தொ.மு.ச. பேரவைத் தலைவர் கே.ஏ. இளங்கோவன் தலைமை வகிக்கிறார்.

காஞ்சிபுரம் மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் பெ.சுந்தரவரதன் முன்னிலை வகிக்கிறார்.

செங்கை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் தலைவர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. பொதுச்செயலாளர் கே.இரவி, காஞ்சி மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் பொருளாளர் எம்.அரசு ஆகியோர் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்கள்.

வேட்பாளர் நித்யா சுகுமாரை ஆதரித்து மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., அகில இந்திய தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன், அகில இந்திய தொ.மு.ச. பிரச்சார செயலாளர் பி.எம். தனசேகரன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இக் கூட்டத்தில் இரா.பொன்னுராம், சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மேயர் மகாலட்சுமி யுவராஜ், சன்பிராட் கே.ஆறுமுகம், பி.தியாக ராஜீலு, க.உதயபாஸ்கர், எஸ். வீரபத்திரன், சி.ஐ.டி.யு.இ. முத்துகுமார், இ.பி.ஸ்ரீதர், ஏ.ஐ.டி.யு.சி. ஏ.மூர்த்தி, இ.பிரகாரம், வி.சி.க. லு. அருள்நாதன், மதி.ஆதவன், ஐ.என்.டி.யு.சி.இராம.நீராளன், என்.எம்.பிரவீன், கே.ஏ.செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்துசெல்வம், வ. ஜெகன்நாதன், பி.நிர்மலா, கு.சுப்பராயன், கே.திலகர், எஸ்.சந்துரு, அ.தசரதன், சு.வெங்கடேசன், வி.எஸ். இராமகிருஷ்ணன், எஸ்.சுகுமாரன், த.விஸ்வநாதன், எஸ்.மாமல்லன், ம.சுரேஷ், பி.சங்கர், எஸ்.ரவிக்குமார், ஜெ.வரதராஜன், எஸ். சேகர், எஸ்.வி.பிரகாஷ்,

அ.யுவராஜ், பி.கார்த்திகேயன், நாத்திகம் நாகராஜன், வ.மலர்மன்னன், கே. செல்வி, சி.ராதாகிருஷ்ணன், ஏ.சசிகுமார், டி. வெங்கட்ராமன், டி.ஜெய்கணேஷ், மகேந்திரன், எஸ். அரவிந்த் குமார், வி.இளம்பருதி, சி.எம்.பிரவு, ப.சுகுமார், எம்.தேவராஜ், ஜாபர் டி.ஸ்ரீதர், ஆ.சதீஷ், பி. விஜயா, ஏ.சரவணன்,எஸ். தாஸ், ஜெ.தேவிகா, ஆர். விஜயலட்சுமி, ஜி.பழனி, வி.வெங்கடேசன், கே.ஜெகதீசன், டி.சந்திரசேகரன், ஏ. தயாளன், எம்.சுதாகர், கே.அருணாசலம், என்.லட்சுமணன், கே.கிரி, ப.அய்யாவு, எஸ்.பழனி, சரஸ்வதி பாலமுருகன், எம்.தேவராஜ், கே.குமரவேல்,

தொ.மு.ச.எம்.சுதாகரன், ஏ.முரளி, மற்றும் பொறுப்பாளர்கள், வி.எம்.இராமலிங்கம், எம்.வெங்டேசன், எஸ்.அசோக்குமார், வி.நடராஜன், என்.ஏழுமலை, இ.தினகரன், பி.கமலநாதன், கே.ஆறுமுகம், கே.சிவக்குமார், ஜி.பாலாஜி, எஸ். பார்த்தசாரதி, என்.தாஸ், கே.பழனி, எம்.செல்வகுமார், எம்.முருகன், பி. அருளானந்தன், எஸ்.சக்திவேல், ஆர்.பிச்சாண்டி, பி. வீரமணி, டி.எல்லப்பன், கே.பாண்டியன், டி.இராஜேஷ், பி.நடராஜன், ஏ.சுந்தர்ராஜன், ஜெயக்குமார், ஏ.ஐயப்பன், எம்.யுவராஜ், ஜெ.விஜயராஜ், வி.திரு நாவுக்கரசு, டி.எம்.விஜய குமார், ஜெ.அமித்பாஷா, ஆர்.மோகன்ராஜ், ஏ.யுவராஜ், வி.எஸ்.வேணுகோபால், கே.அரிபாபு, ஆர்.உந்தியப்பன், எஸ்.இ.சிவக்குமார், டி.ஸ்ரீனுவாசன், இரா.தேவராசன், பி.அறிவழகன், பி.எஸ்.இளங்கோ, பி.எஸ்.குடியரசு, எஸ்.ஆறுமுகம், எஸ்.அரிவழகன் மற்றும் அனைத்து தொழிற் சங்க நிர்வாகிகள், தொழிலாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். நிறைவாக ஏ.சி.ஜெயராமன், என்.வரதன், ஆர்.சம்பத் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

# சட்டமன்றத் தேர்தல் - 2026

## கழகத் துணைப் பொதுச் செயலாளர்



# கனிமொழி கருணாநிதி எம்.பி.

## தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயண விபரங்கள் (சென்னை)

**15.04.2026 (புதன்கிழமை)**

| நேரம் | இடம் |
|---|---|
| 04:30 PM | துறைமுகம் தொகுதி - தம்புசெட்டி தெரு, மண்ணடி சந்திப்பு |
| 05:00 PM | எழும்பூர் தொகுதி - மோதிலால் நேரு தெரு, புளியந்தோப்பு |
| 05:30 PM | மயிலாப்பூர் தொகுதி - ஆழ்வார்பேட்டை தெரு காந்தி சிலை அருகில் |




சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்ற தொகுதி மதச் சார்பற்ற கூட்டணி வேட்பாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர் பாபு 60–வது வட்டத்தில் வாக்கு சேகரித்தார். இந்த வாக்கு சேகரிப்பில் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி,இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்:கே.கவியரசு, எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், ஆ.நா.பார்த்திபன், லண்டன் க. முருகன். மற்றும் கழக நிர்வாகிகள் தோழமைக் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.